திருமதி த. ந. அனந்தநாயகி: குடியரசுத் தலைவர், ஆளுநர் போன்றவர்கள் ஆலயத்திற்கு வரும்போது பந்தோபஸ்து அளிக்கப்பட வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆண்டவன் கொடுக்காத பாது காப்பையா இவர்கள் கொடுக்க முடியும்?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: ஆண்டவனுக்கும் ஆளுநர்கள் பாது காப்புக் கொடுக்க வேண்டியிருக்கிறது. (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) அறிவிப்பு

தமிழ்நாடு நில மேம்பாட்டு வாரியத்திற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு நிலமேம்பாட்டு வாரியத்திற்கு (Tamil Nadu Land Improvement Board) கீழ்க்கண்ட மூவருடைய பெயர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளன:—

1. திரு. என். இராஜாங்கம்.

திரு. என். கிட்டப்பா.

3. திரு. ஆ. கு. சுப்பையா.

முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஒத்திருப்பதால், அதாவது மூன்று என்பதால், மூவரும் தமிழ்நாடு நிலமேம்பாட்டு வாரியத்திற்கு முறைப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் என நான் அறிவிக்கிறேன்.

(3) கவன ஈர்ப்பு

சென்னை மாநகரில் வாடகை வண்டி (டாக்சி) ஓட்டுனர்கள் நடத்த இருக்கும் வேலை நிறுத்தம் பற்றி

THIRU K. T. K. THANGAMANI: Sir, I call the attention of the Hon. Minister for Transport to a matter of urgent public importance, namely, the proposed strike of Taxi drivers in Madras City on 19th July 1971 and likely hardships to the people and the need to settle the demands of the Taximen at an early date. I request that the Hon. Minister may be pleased to make a statement thereon.

திரு. ஏ. எம். இராஜா: சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ்,

19—7—1971-ம் நாள் அன்று சென்னை மாநகரில் வாடகை வண்டி ஓட்டு னர்கள் நடத்தவிருக்கும் வேலை நிறுத்தமும், அதன் காரணமாக மக்களுக்கு ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளும் உடனடியாக வாடகை வண்டிக்காரர்களின்